**IDOP.No.51/2023**

**Date : 27.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

RW 1 **திருமதி. ஷீபாராணி**

**குறுக்கு விசாரணை :**

1. நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். எனது பெற்றோர்கள் வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது கம்பத்தில் ஒரு தனியார் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது எதிர் வழக்குரையில் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் என்னை அழைத்துச் சென்றால் நான் அவருடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேனா என்றால் எனக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பான சூழ்நிலையில் அவர் கொடுக்கும் பட்சத்தில் நான் அவருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். அவ்வாறு எந்த இடத்தில் பாதுகாப்பாக சூழ்நிலை உள்ளதோ அங்கு மனுதாரர் எனக்காக வீடு அமர்த்தும் பட்சத்தில் நான் அவருடன் குடியிருக்க தயாராக இருக்கிறேன்.

2. பாளையத்திலோ அல்லது கூடலூரிலோ அவர் வீடு அமர்த்தும் பட்சத்தில் நான் அவருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். மனுதாரரின் சொந்த ஊர் தேவாரம். அந்த வீட்டில் தற்போது யாரும் இல்லை என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு மின்சார இணைப்பு இல்லை என்பதால் யாரும் அங்கு குடியில்லை. அந்த தேவாரம் வீட்டில் அனைத்து வசதிகளையும் மனுதாரர் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்து குடியிருக்க ஏற்பாடு செய்தால் எனக்கு சம்மதமா என்றால் எனக்கு சம்மதம் கிடையாது. தேவாரத்தில் இருந்து நான் பணி செய்யும் கல்லூரி சுமார் 45 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் இருக்கலாம்.

3. தற்போது நான் கம்பத்திலிருந்து எனது பணி செய்யும் கல்லூரியின் தூரம் 15 நிமிடம் பயண தூரம். சந்தோஷமாக என்னையும், எனது குழந்தைகளையும் வைத்து மனுதாரர் பராமரித்து குடும்பம் நடத்த தயாராக இருக்கிறார் என்றும், நான் தான் அவருடன் சேர்ந்து வாழ மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர் வழக்குரையில் பெண்ணுக்குரிய அடிப்படை சுதந்திரத்தை மனுதாரர் கொடுத்தால் நான் அவருடன் வாழ தயாராக இருப்பதாக சொல்லி உள்ளேன்.

4. அவ்வாறு அடிப்படை சுதந்திரம் என்பது எனக்கும், எனது குழந்தைகளுக்கும் பாதுகாப்பான சூழ்நிலை என்பதைத்தான் நான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். எனது முதல் குழந்தைக்கு மன உளைச்சல் பிரச்சனை உள்ளது. இந்த பிரச்சனைகளை மனுதாரர் சரி செய்து என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.27 16:30:48 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.